## இராணிமேரி கல்லூரி (தன்னாட்சி) சென்னை - 600004.

## உயர் தமிழாய்வு மையம்

# கலைஞர் நூற்றாண்டு நினைவுப் பன்னாட்டுக் கருத்தரங்கம்





## பங்கேற்புச் சான்றிதழ்

முனைவர்/திரு/செல்வி/திருமதி .....செ. மார்கண்டன்.........................................

.................................................................. 18.03.2025 அன்று நடைபெற்ற பன்முக நோக்கில் முத்தமிழறிஞர் கலைஞர் படைப்புலகம் என்ற பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கில் ஆய்வாளராக/பங்கேற்பாளராகக் கலந்து கொண்டு ....ஒரு...மரம்.....பூத்தது...........

..நாவல்...புகட்டும்....மறுமணம்......................... என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை வழங்கிச் சிறப்பித்தார் என்று சான்றளிக்கப்படுகிறது.





*வாழ்த்துக்கள்*

| | | |
|---|---|---|
| ஒருங்கிணைப்பாளர்கள் | தமிழ்த்துறைத் தலைவர் 18.03.2025 | B. V... |
| உயர்தமிழாய்வு மையம் | உயர்தமிழாய்வு மையம் | முதல்வர் |
| | | இராணி மேரி கல்லூரி |





பன்முக நோக்கில் முத்தமிழறிஞர்

# கலைஞரின்

## படைப்புகள்

தொகுதி

3



தொகுப்பாசிரியர்கள்:
முனைவர் இர.சிவசக்தி
முனைவர் கே.இரா.கமலாமுருகன்

சீதை
பதிப்பகம்

தலைப்பு :
பன்முக நோக்கில் முத்தமிழறிஞர்
கலைஞரின் படைப்புகள்
PANMUGA NOKKIL MUTHAMIZHARIGNAR
KALAIGNARIN PADAIPUKAL
தொகுப்பாசிரியர்கள் :
முனைவர் இர.சிவசக்தி
முனைவர் கே.இரா.கமலாமுருகன்
DR.R.SIVASAKTHI
DR.K.R.KAMALA MURUGAN
பொருள் :
கட்டுரை
NON-FICTION
பதிப்பாசிரியர் :
எஸ்.கௌமாரீஸ்வரி எம்.ஏ.,எம்.எல்.ஐ.எஸ்.,
S.Gowmareeswari M.A.,M.L.I.S.,
உரிமை :
பதிப்பகத்திற்கே
copyrights@publications
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6A/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 5.
அச்சிட்டோர் :
R.I.S.PRINTERS, CHENNAI.
பதிப்பு :
முதற் பதிப்பு - 2024/11
பக்கம் : 352
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
ISBN : 978-93-48472-02-1

விலை : ரூ. 1300
(3 தொகுதிகள்)

Code : 2628

நூல் கிடைக்குமிடம் :
கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 600005.
9790706548 / 9790706549.
gowra09@gmail.com
கௌரா புத்தக மையம்
9, செயின்ட் ஜான் சர்ச் காம்ப்ளக்ஸ்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 620001.
9952034676 / 9943428994.
gowraputhagamaiyam@gmail.com
www.gowrabookfair.com

## உள்ளே...

1. ஒரு மரம் பூத்தது நாவல் புகட்டும் மறுமணம் ........................................ 1
முனைவர் செ.மார்கண்டன்
2. சொத்துரிமை முதல் கல்வி வரை, கலைஞர் மு.கருணாநிதி செயல்படுத்திய பெண்கள் நலத்திட்டங்கள் ........................................ 6
முனைவர் க.கமலா,
3. கலைஞரின் படைப்பிலக்கியங்களில் பன்முகத்தடங்கள் ........................................ 9
முனைவர் அ.இஸ்பா
4. கலைஞரின் படைப்புகளில் நெஞ்சுக்கு நீதி ஓர் ஆய்வு ........................................ 15
முனைவர் பீ.ஜெயஸ்ரீ,
5. கலைஞர் மு.கருணாநிதியின் கவிதைகள் ........................................ 20
முனைவர் வெ.சங்கீதா
6. தமிழக வளர்ச்சியில் கருணாநிதியின் செயல்திட்டங்கள் – ஓர் பார்வை 25
முனைவர் த. பூர்ணச்சந்திரா
7. படைப்பாளிகளின் பார்வையில் கலைஞர் ........................................ 29
முனைவர் செ.சுகவனேஸ்வரன்
8. கன்னித்தமிழ் வளர்த்த கவிஞர் கலைஞர் ........................................ 36
பேரா. முனைவர் விஜயலட்சுமி இராமசாமி
9. மேடையிலே வீசிய மெல்லிய பூங்காற்றில் சொல் நயம் (டாக்டர் கலைஞர் கருணாநிதி) ........................................ 39
முனைவர் சி.முத்துச்செல்வி
10. பருந்துப் பார்வையில் கலைஞரின் சிறுகதைகள் ........................................ 48
முனைவர் எம் எஸ் ஸ்ரீலக்ஷ்மி,
11. கவிஞர் வாலியின் பார்வையில் கலைஞர் ........................................ 55
முனைவர் ஞா. செந்தில்
12. கலைஞர் ஒரு முத்தமிழ்க் காவியம் ........................................ 61
சு.பாரதி
13. கலைஞரின் படைப்புகளில் பன்முகத்தன்மை ........................................ 67
முனைவர் செ.கல்பனா
14. கன்னித்தமிழ் காதலர் கலைஞர் ........................................ 73
முனைவர் த. சங்கீதா எம்.ஏ.எம்.எட்.பிஎச்.டி,
15. கலைஞரின் செங்கோல் ஆட்சியும் எழுதுகோலின் மகிமையும் ........................................ 78
முனைவர் ஞா. விஜயகுமாரி
16. கலைஞரும் தமிழ்ப்பற்றும் ........................................ 82
முனைவர் ஜெ. ஜெயவாணிஸ்ரீ,



# 1. ஒரு மரம் பூத்தது நாவல் புகட்டும் மறுமணம்

முனைவர் செ.மார்கண்டன்
இணைப்பேராசிரியர்
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்
பல்லாவரம், சென்னை- 117
செல் : 9842324206

## முன்னுரை

கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் படைப்புகளில் ஒன்றான 'ஒரு மரம் பூத்தது' என்ற நாவல் வழி விதவைப் பெண்கள் எதிர் கொள்ளும் அவலங்களை விவாதிக்கிறது இந்நாவல். சமூகத்தில் இழையோடிக் கிடக்கும் மூடநம்பிக்கைகளை, பெண் மீது ஆணாதிக்க சமூகம் செலுத்துகின்ற எல்லை மீறல்களை இந்நாவலில் வரும் பெண் பாத்திரங்கள் எவ்வாறு எதிர் கொள்கிறது என்ற கேள்வின் ஊடாக இக்கட்டுரை தன்னைக் களமாக்கிக் கொள்ள முனைகிறது.

## நாவல் பின்னணி:-

"சிறுகதை உலகில் புரட்சி ஏற்படுத்திய ஓ.ஹென்றி தீட்டிய 'கடைசி இலை' என்ற சிறுகதையை மையமாக வைத்து இந்தக் கதையை எழுதுகிறேன்." (மு.கருணாநிதி;ஒரு மரம் பூத்தத, 2023;3) என்னும் கலைஞரின் கூற்றின் முறையே, 'ஒரு மரம் பூத்தது' என்ற இந்நாவல் o. Henry-யின் 'The Last leep' என்ற சிறுகதையைத் தழுவியது என்பது புலனாகிறது . 'ஒரு மரம் உதிர்ந்து 'என்ற சிந்தனையைத் தழுவியது அச்சிறுகதை. ஆனால் கலைஞர் தனது முற்போக்குச் சிந்தனையால் 'ஒரு மரம் பூத்தது' என்னும் பொருண்மையில் பெண் விடுதலை, சமூக விடுதலை, விதவை மறுமணம் என்பதை மையமாகக் கொண்டு இந்நாவல் நகர்ந்துள்ளதை அறிய முடிகிறது. பட்ட மரம் பூக்கும் என்று விதவை மறுமணத்தைக் குறியீடாகக் காட்டுவது கலைஞரின் சமூக சீர்திருத்த விடுதலையை நோக்கிய பயணத்தை அறியும் வாய்ப்பாக அமைகிறது.

**நாவல் கதையோட்டம்:-**

தமிழ் சமூகத்தில் நிகழும் சாதி ஒழிப்பு , கலப்புத் திருமண, விதவையின் ஏமாற்றம், மூடநம்பிக்கை, சமூகச் சீர்திருத்த, ஆணாதிக்கச் சிந்தனை எனச் சமூக சிக்கல்களை இந்நாவல் விவாதிக்கிறது. இந்நாவலின் மையமாகப் பாத்திரமாகிய 'தேவகி' பாத்திரம் கட்டமைக்கப்பட்டுள்ளது. தேவகியை அடைய ஆண் பாத்திரங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் சொற்சித்திரமாக வரைந்திருக்கிறார் கலைஞர். தேவகி வீட்டை எதிர்த்து கலப்பு காதல் திருமணம் செய்து கொள்ளும் முற்போக்கு வாதியாகக் கட்டமைக்கப்பட்டுள்ளாள்.

ஆனால் , கணவன் இறந்து விதவை ஆன பின்பு, இந்த ஆணாதிக்கச் சமூகம் தேவகியின் மீது திணிக்கும் வன்மங்கள் ஆயிரம். ஆண் பாதுகாப்பு இல்லாமல் பெண் இச்சமூகத்தில் வாழ்தல் எளிதல்ல என்பதைத் தேவகியின் வாயிலாக உணர்த்த முனைகிறார் நாவலாசிரியர். ஆண் வர்க்கத்தில் இருந்து தேவகியின் மீது வெவ்வேறு விதமான வன்மத் தாக்குதல் என்பது நிகழ்ந்த வண்ணம் இருக்கிறது.

எந்த ஆணை நம்புவது என்ற கேள்விகள் எழுகின்றன. இறுதியில் ரகு என்ற பாத்திரம் நம்பிக்கைக்கு உரியவாக அமைகிறான். ரகு தேவகிக்கும் தன் மகன் பாபுவிற்கும் வாழ்க்கை துணையாக நிற்பது, மறுமண வாழ்வை இச்சமூகம் எற்றுக்கொள்வதை உணர்த்துகிறது.

**ஆண் புனைவு:-**

இந்நாவலில் வரும் ஆண்கள் பெரும்பாலும் வன்மத் தாக்கத்தையே விதைக்கின்றனர். ராதா, மாணிக்கம், மந்திரவாதி போன்ற ஆணாதிக்க சிந்தனை விளைச்சலில் உதிர்த்தவர் களாகவே காட்டப்படுகின்றனர். ரகு தேவகியின் கணவன் திவாகர் இருவர் மட்டும் நம்பிக்கைக்கு உரிய பாத்திரங்களாகக் கட்டமைக்கப்பட்டுள்ளனர்.நல்லதும்,தீயதும் அடங்கியதே இச்சமூகம் என்ற எதார்த்தத்தை நாவலில் பயணிக்கும் பாத்திரங்களின்வழி அறிய முடிகிறது.

**கலைஞரின் நடை**

"அனைத்து வகுப்பறைகளிலிருந்தும் சிறார்கள் ஆவலுடன் வெளியேறி, மூட்டையிலிருந்த நெல்லிக்காய் சிதறுவதைப் போல நாலா திசைகளிலும் விரைகின்றனர்". (மேலது;ப.5) கவிதை நடையில் கதைகளை கட்டமைக்கும் எழுத்தாளர் கலைஞர் என்பதை இக்கூற்று தெளிவுப்படுத்துகிறது.

**கலப்பு மணம்**

"சாதி வேற்றுமை எனும் தடைச்சுவர், தனது தரப்பில் கிளம்பியபோது அதைத் தகர்த்தெறிந்து திவாகரைத் திருமணம் செய்து கொண்டாள்! இதன் காரணமாகத் தனது சொந்தங் களையும், பந்தங்களையும் அறுத்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் அவளுக்கு ஏற்பட்டது". (மேலது;ப.6)

இத்தகைய கூறின் வழி அறிவது , சாதி மறுப்பின் ஊடான கலப்புத் திருமணத்தை இந்நாவல் வலிவுறுத்துவதை அறிய முடிகிறது.

**பாபுவின் மூடநம்பிக்கை**

தேவதை கனவில் கூறியதை அப்படியே நம்பிய பாபு, பன்னீர் மரத்தில் பூத்து உதிரும் பூக்கள் தன் இறப்பை உறுதி செய்வதாக நம்பத் தொடங்கி விளைவு, பாபுவின் உடல,மனம் சோர்ந்து மூடநம்பிகையால் இறப்பு தன்னை நெறுங்குவாத நம்பினான். இம்மூடநம்பிக்கையின் முறையே,

"இதோ பாரும்மா, நேற்று ராத்திரி எட்டு பூ இருந்த துல்லே... அதுலே ஒண்ணு விழுந்திடுச்சி...இன்னும் ஏழுதான் இருக்கு... நானும் ஏழுநாள்தான் இருப்பேன்..!" (மேலது;ப.9)

இத்தகைய அவநம்பிக்கை கொண்டவனாக பாபு பாத்திரம் சித்தரிக்கப்பட்டுள்ளது. மகாபாரத நையாண்டி மகாபாரத்தில் திரௌபதிக்குச் சேலையைத் தந்து அவள் மானத்தைக் காப்பாற்றும் கண்ணனை நினைவூட்டுவதாக பின்வரும் கூற்று அமைந்துள்ளது. அம்முறையே,

"அண்ணா! என்று கூறி எழுந்தாள் அவள்! கண்ணா என்று சொல்லக்கூடாதா... ? தேவகி... ப்ளீஸ்!" பல்லைக் காட்டினான் ராதா". (மேலது;ப.11)

இக்கூற்று கலியுகத்தில் எந்த கண்ணனும் வந்து தேவகியைக் காப்பாற்ற முன்வர மாட்டார்கள் என்னும் சிந்தனையை வெளிப்படுத்துவதாக அமைகிறது.

**ஆணாதிக்கச் சிந்தனை**

"சத்தம்போட்டா... உனக்குத்தானே மானக்கேடு? எனக்கென்ன, நான் ஆம்பளே!" (மேலது;ப.11)

என்னும் வார்த்தைகள் பெண்ணுக்கு மட்டுமே மானத்தை இந்த சமூகம் உரிய தாக்கிப் பெண்களை அடிமைப்படுத்தி வைத்துள்ள உளவியலைப் புரிந்துகொள்ள முடிகிறது. மானமும்,

அவ்வளவுதான்... நீயா மனது மாறி நான் சொல்றபடி இருந்த... இந்தக் கூட்டத்துக்கு நீதான் தலைவி. இந்த ராஜியத்துக்கு நீதான் மகாராணி... என்ன சொல்றே?" (மேலது;ப.94) இக்கூற்று இராவணன் சிதையின் நடவடிக்கையை நினைவூட்டுவதாக அமைந்துள்ளது.

## நபிகள்நாயகம் கதிஜா நினைவு

"உங்கம்மா ஒரு முண்டச்சி... அவளுக்கு எப்படிக் கல்யாணம்?" - என்றான் ராதா எரிச்சலுடன். கோடானு கோடிப் பேரால் கொண்டாடப்படுகிற நபிகள் நாயகம், கதிஜா அம்மையார் என்ற விதவையைத்தானே கல்யாணம் செய்துக்கிட்டார்?" (மேலது;ப. 115)

இக்கூற்று நபிகள் நாயகத்தின் மறுமணம் புரட்சி சமூகத்தில் விளைவித்து உள்ள வரலாற்றை நினைவூட்டுவதாக அமைந்துள்ளதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

## மாமா அப்பாவானது

"விதவைகள் மறுவாழ்வு மணத்தைப் பாபு கூறியதை எண்ணி தேவகியும் மகிழ்ச்சி அடைந்தாள்". இதுவரை மாமா என்று அழைத்து வந்த ரகுவை தற்போது அப்பா என்று அழைக்கும் மனநிலைக்கு பாபு பாத்திரம் மாறுவது மறுமண வாழ்வை இச்சமூகம் ஏற்றுக்கொள்ளத் தயாராகி விட்டதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

## முடிவுரை

கலை என்பது வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான கருவியாக இருக்க வேண்டும். வெறும் கற்பனையின் சொற்குவியல்களாக படைப்புகள் இருந்துவிடக் கூடாது என்ற கொள்கை உடையவர் கலைஞர்.இப்பின்னணியில் இப்புதினம் பகுத்தறிவை வளர்ப்பதாக, சாதி மத பேதங்களின் ஒழிப்பை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது. எனவே, 'ஒரு மரம் பூத்தது' என்னும் நாவலின் மூலம் விதவை மறுமணத்தின் அவசியத்தைச் சமுதாயத்திற்கு விளங்க வைக்கும் நோக்கில் எழுதப்பட்ட நாவலாக, இப்படைப்பைப் புரிந்துகொள்ள முடிகிறது.

## பார்வை நூல்

1. கலைஞர் மு.கருணாநிதி - ஒரு மரம் பூத்தது. பாரதி பதிப்பகம். பதிப்பு-2023.

★★★